1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி கேளுங்கள், பேச்சாக ஆரம்பித்துவிட்டீர்களே.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆகவே இந்தத் திட்டத்தை பஞ்சப் பட்டிக்கு நீட்டித்துத் தர அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே அத்திட்டம் பற்றி முடிவு செய்யப்பட்டு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களின் கருத்து சாத்தியமானதாக இருந்தால் பரிசீலித்துப் பார்க்கலாம்.

'அதிகாரி' கண்மாய்

*75 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றிய எல்லைக்குள் உள்ள அதிகாரி கண்மாயினை மராமத்து செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) ஒப்ப அறிவிப்புகள் உறுதிப் படுத்தப்பெற்றபின், வேலை துவங்கப் பெறும்.

திரு. நா. வெ. குருசாமி: தற்சமயம் அந்தக் கண்மாயில் வேலை நடந்து கொண்டிருக்கிறது கடந்த ஒரு மாத காலமாக. ஆனால் அந்தக் கால்வாயை வெட்டும்போது சிலர் இடையூறு செய்கிறார்கள். அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்தக் கால்வாயை விரைவில் சீரமைக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இடையூறுகள் நடைபெறாத அளவிற்கு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தந்து நடவடிக்கைகள் எடுத்தால் அதிகாரிகள் விரைவாக நிறைவேற்றித் தருவார்கள்.

Aruppukottai Tank

* 76 Q.—THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any permission was given by Public Works Department authorities to cut open the bund of Aruppukottai